**O.S.149 of 2021**

Date : 16.06.2026.

பி.சா.1 : துரை

<u>பி.சா.1 மீண்டும் அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>

வாதியை ரிமாண்ட் செய்த பெண்ட காவலர் ஸ்டெல்லா மேரி பாய் என்பவர் மீது வாதி OS No. 150/2021 என்ற வழக்கை மான நஷ்ட வழக்கு கேட்டு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் வா.சா-ஆ-1 புகாரின் கை நகல் எங்கள் காவல் நிலையத்தில் வாதியால் கொடுக்கப்பட்டது என்றால் என்னிடம் கொடுக்கவில்லை. பொதுவாக FIR ஐ பதிவு செய்வது அரசால் கொடுக்கப்பட்ட பேப்பரில்தான் பதிவு செய்ய வேண்டும் என்றால் சரிதான். அந்த பேப்பர் காலியாவதற்கு முன்பே கேட்டு வாங்கிவிடுவோம் என்றால் சரிதான். வழக்கில் உள்ள FIR மேற்படி பேப்பரில்தான் போடப்பட்டது என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ-2 ல் அரசால் கொடுக்கப்பட்ட பேப்பர் தீர்ந்துவிட்டதால் இந்த பேப்பரில் போடப்பட்டது என்று உள்ளது என்றால் சரிதான். பேப்பர் தீர்ந்து போக வில்லை என்றும் ராபர்ட் என்பவருக்கு அனுசரனையாக செயல்படவேண்டும் என்பதற்காகவும் பொய்யாக வழக்கு பதிவு செய்ய வேண்டும் என்பதற்காக அவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நான் தவறாக கைது செய்து விட்டதாக வாதி காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் புகார் கொடுத்தார் என்றால் எனக்கு நியாபகம் இல்லை. என்னிடம் காட்டப்படும் புகார் 29.07.2020 ம் தேதியன்று நான் மற்றும் ஸ்டெல்லா மேரி உட்பட 12 நபர்கள் மீது காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். மேற்படி புகாரின் அலுவலக நகல் **வ.சா.ஆ-8** ஆகும். அந்த புகாரின் விசாரணையின் அடிப்படையில் என் மீது துறைரீதியாக நடவடிக்கை எடுக்கப்பட்டது என்றால் சரியல்ல. விசாரணை மட்டும்தான் நடைபெற்றது. மேற்படி புகாரின் அடிப்படையில் என் மீது குற்றவியல் நடுவர் நீதிமன்றம் நான்குநேரியில் Cr.MP.No.1933/2020 ல் வழக்கு போடப்பட்டது என்றால் நியாபகம் இல்லை. என்னிடம் காட்டப்படும் கடிதம் Cr.MP.No.1933/2020 ல் தவறாக போடப்பட்டுள்ளது என்றும் எனவே மேற்படி மனுவை தள்ளுபடி செய்யக்கேட்டு நான்குநேரி காவல் ஆய்வாளரால் மூலைக்கரைப்பட்டி காவல் நிலையம் பொறுப்பு அவர்கள் சமூகம் நீதிமன்றத்திற்கு அனுப்பிய கடிதம் என்றால்

சரிதான். மேற்படி கடிதம் **பி.சா.ஆ-9** ஆகும். நிரூபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளது போல் நான் உச்சநீதிமன்ற வழிகாட்டுதலை பின்பற்றவில்லை என்றால் சரியல்ல. உச்ச நீதிமன்றமும் மற்றும் உயர் நீதிமன்றமும் Civil வழக்குகளில் தலையீடு செய்யவேண்டாம் என்று கூறியும் தவறு செய்துள்ளேன் என்றால் சரியல்ல. ராபர்ட் கன்ஷ்ட்ரக்ஷனின் பிரச்சனைக்குரிய இடம்குறித்துதான் எல்லா புகார் மனுவும் என்னிடம் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் இல்லை. இவ்வழக்கு பொன் செல்விக்கும் மல்லிகாவிற்கும் இடையே ஏற்பட்ட பிரச்சனை சம்மந்தப்பட்டது. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ-2 FIR ல் உள்ள எனக்கும் ஆண்டாளுக்கும் இடையே இடப்பிரச்சனை உள்ளது என்றுதான் உள்ளது என்றால் சரிதான். 02.06.2020 ம் தேதி அன்று வாதியை அழைத்து நான் முதல் விசாரணை மேற்கொள்ளாமல் நேரடியாக கைது செய்தேன் என்றால் முதல் விசாரணை எதுவும் செய்யவில்லை. நேரடியாக கைது செய்தேன். 02.06.2020 ம் தேதி அன்று புகார் கொடுத்தவர் நேரடியாக காவல் நிலையம் வந்து ஆஜர் ஆகி புகார் கொடுத்தார் என்றால் சரிதான். மருத்துவமனையில் இருந்து தகவல் எதுவும் வரவில்லை என்றால் சரிதான். மருத்துவ நமுனா கொடுத்து மருத்துவமனை அனுப்பவில்லை என்றால் சரிதான். புகார்தாரர் கொலை மிரட்டல் இருப்பதாக புகாரில் தெரிவித்துள்ளார். புகார்தாரருக்கு கொலை முயற்சி இருப்பதற்கு முகாந்தாரம் இருப்பதற்கு Shado Police போடவில்லை என்றால் சரிதான். புகாரில் சொல்லப்பட்டுள்ளது போல் எதுவும் நடக்கவில்லை என்றாலும் வாதி கொடுத்த புகாரின் பேரில் நடவடிக்கை எடுக்காமல் பொன் செல்வி கொடுத்த பொய் புகாருக்கு நடவடிக்கை எடுத்து வாதியை சட்டவிரோதமாக கைது செய்து வாதிக்குரிய நற் புகழை கலங்கபடுத்தினேன் என்றால் சரியல்ல. தாவா புகார் வா.சா.ஆ-2 ல் பிணையில் விடக்கூடாத குற்றமானது 506(ii) IPC என்றால் சரிதான். இதச பிரிவுகள் 506(1) மற்றும் 506(ii) க்கும் உள்ள வேறுபாடு என்ன என்றால் 506(1) வாயால் மிரட்டல் விடுவது 506(2) ஆயுதத்தால் மிரட்டல் விடுப்பது ஆகும். இவ்வழக்கில் வாதி மிரட்டர் விடுத்ததாக சொல்லப்படும் ஆயுதம் கல் ஆகும். வாதியை கைது செய்து ஒப்புதல் வாக்குமூலம் வாங்கவில்லை. கல்லை தேடி பார்க்கவில்லை. கைப்பற்றவில்லை என்றால் சரிதான். கைப்பற்றாததற்கு காரணம் என்ன என்றால் (சாட்சி மவுனம் சாதிக்கிறார்). மேற்படி சம்பவமே நடைபெறாததால்தான் வாதியை கைது செய்ய வேண்டும் என்ற நோக்கத்தோடு என் அதிகாரத்தை மீறி உள்ளேன் என்றால்

சரியல்ல. வாதி கொடுத்த புகாருக்கு அவரை காவல் நிலையத்தில் வைத்தே ரிமாண்ட் செய்தேன் என்றும் நான் தேடி சென்று கைது செய்யவில்லை என்றால் சரியல்ல. கொரனா காலகட்டத்தில் ரிமாண்ட் அவசியம் இல்லை என்று சொன்னபின்பும் ராபர்ட்க்கு ஆதரவாக வாதியை கைது செய்தேன் என்றால் சரியல்ல. 307 வழக்குகளுக்கு கூட போதுமான காரணங்கள் இருந்தால் பிணையில் விட காவல் ஆய்வாளருக்கு அதிகாரம் உண்டு என்றால் சரிதான். வாதி பெண் என்பதால் காவல் நிலைய ஜாமினிலே விட்டுருக்கலாம் என்றால் உயர் அதிகாரிகள் உத்தரவின் பேரில் கைது செய்தேன். எந்த உயர் அதிகாரியும் எனக்கு உத்தரவு கொடுக்கவில்லை என்றும் ராபர்ட்க்கு சாதகமாக வாதியை கைது செய்தேன் என்றால் சரியல்ல. மேற்படி ராபர்ட் சிவில் வழக்கில் 11ம் பிரதிவாதி என்றால் எனக்கு யார் என்றே தெரியாது. ராபர்ட் கன்ஷ்ட்ரக்ஷன் காவல் நிலையம் அருகில் இருப்பதாக குறுக்குவிசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். வாதிக்கு தண்ணீர் கொடுக்காமலும் சிறுநீர் கழிக்க விடாமல் துன்புறுத்தினேன் என்றால் சரியல்ல. வாதியை நீதிமன்றத்திற்கு அழைத்து செல்லும் போது தனியார் காரில்தான் அழைத்து சென்றோம் என்றால் மூலைக்கரைப்பட்டியில் இருந்து நீதித்துறை நடுவர் நீதிமன்றத்திற்கு பஸ்சிலும் நான்குநேரியில் இருந்து திருநெல்வேலி கொக்கிரகுளம் மத்திய சிறைச்சாலைக்கு காரில் அழைத்து சென்றோம் என்றால் திருநெல்வேலி புது பஸ்ஸ்டாப் வரை பஸ்சிலும், அங்கிருந்து ஜெயிலுக்கு ஆட்டோவிலும் அழைத்து சென்றோம். நான் சொல்வதுபோல் பஸ்சில் அழைத்து செல்லவில்லை என்றாலும் வாதியிடம் பணத்தை வாங்கி காரை வாடகைக்கு எடுத்து அழைத்து சென்றோம் என்றால் சரியல்ல. வாதியை சட்டவிரோதமாக கைது செய்து உச்சநீதிமன்ற வழிகாட்டுதலை கடைபிடிக்காமல் ராபர்ட் என்பவரின் தூண்டுதலின் பேரில் வாதியை சிறையில் அடைத்து அவரின் நற்பெயரை கலங்க படுத்தியதால் வாதி வழக்கறிஞர் அறிவிப்பின் மூலம் ரூ.3 லட்சம் இழப்பீடு கேட்டார் என்றால் சரிதான். அதற்கு நான் பதில் அனுப்பவில்லை என்றால் சரிதான். வாதிகேட்கும் பரிகாரம் கிடைக்கத்தக்கது என்றால் சரியல்ல.